நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம்
807, அண்ணா சாலை, சென்னை-2.

சுற்றறிக்கை

ந.க.எண்.12544 /2014/சிபி நாள் .04.7.2014

பொருள்: நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப இசைவு/திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தேசங்களில் சொத்தினை வாங்கும் தனி நபர் இச்சொத்தின் மீதான விண்ணப்பதாரர்/நில உரிமையாளர்களுக்கான நில உரிமையை சுயமாக/தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள நிபந்தனையிட தெரிவித்தல்- தொடர்பாக.

நகர் ஊரமைப்புத் துறையின் தொழில் நுட்ப இசைவு /திட்ட அனுமதி வழங்கக் கோரி பெறப்படும் பலமாடிக் கட்டிடம்/தொகுப்புக் கட்டிடம்/சிறப்புக் கட்டிட உத்தேசங்களில், விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த கிரையப்பத்திரம்/ குத்தகைப்பத்திரம்/பட்டா/தானப்பத்திரம்/பொது அதிகாரப் பத்திரம் மற்றும் பல ஆகியவற்றினைப் பரிசீலித்து முதற்கட்டமாக விண்ணப்பதாரர் இவ்வளர்ச்சியினை செய்ய உரிமை உள்ளவரா என்று மட்டுமே சரிபார்க்கப்பட்டு தொழில் நுட்ப இசைவு /திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

எனவே, கீழ்காணும் சிறப்பு நிபந்தனையினை இத்துறையால் வழங்கப்படும் அனுமதி உத்தரவுகளில் விதித்து தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும் என அனைத்து சார்நிலை அலுவலகங்களும் அறிவுறுத்தப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

"நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

(த.பி.பா)

Verified by RealEstate™

இச்சுற்றறிக்கை உடன் அமுலுக்கு வருகிறது.

இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்)/-இரா.வெங்கடேசன்
நகர் ஊரமைப்பு ஆணையர்

பெறுநர்
அனைத்து உறுப்பினர் செயலர்கள்,
உள்ளூர் திட்டக் குழுமம்/புதுநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும்
அனைத்து மண்டல துணை இயக்குநர்கள்.

நகல்:
1) அனைத்து தலைமை அலுவக உதவி இயக்குநர்கள்
2) கட்டிடக்கலை/ திட்ட உதவியாளர்/
மேற்பார்வையாளர்கள்/வரைவாளர் நிலை-2
3) இருப்பு கோப்பு
4) e-Governance

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

Verified RealEstate™